தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. VI.—No. 24.] MADRAS:—SUNDAY JUNE, 12, 287. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

ஆன்மவிசாரணை.	சூத்திரர்முன்னிருந்தநிலைமை.
பிரார்த்தனை.	வர்த்தமானசங்கிரகம்.
இந்துசமயசாரவிளக்கம்.	நோட்டீசு.

அறிக்கை

**சந்தாக்களையும், பத்திரிகைவேண்டி-
எழுதிக்கொள்ளுங்கடிதங்களையும்**
மௌப்பேரி சிலவர்ஸ் ரோட்டில்
மதிராஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்ரிட்டேரி
மெஸ்டர் அப்ஷன்துரைக்குநேராய்
அனுப்பவேண்டும்; அனுப்பாவிட்டால், பத்திரிகை
கிடைக்கமாட்டாது.

ஆன்மவிசாரணை.

(89-வது பக்கத் தொடர்ச்சி.)

ஆன்மாவைப்பற்றி நமக்கு என்னதெரியும்? ஒன்றுமில்லையே. சூக்ஷுமமாகிய ஆன்மா தன்னோடு எவ்வாற்றானும் ஒற்றுமையில்லாத தூலபதார்த்தத்தோடு எவ்வாறு பொருந்தியிருக்குமென்பதை ஆன்மசித்தாந்திகள் சொல்லுதல் வேண்டுமே. தேகத்தினாலேயே ஆன்மா உண்டென்பதும் இல்லையென்பதும் தீர்மானித்தல்கூடும் என்றும், ஆன்மாவானது தேகமாகிய சட்டையைப் போர்த்திருக்கின்றது என்றும், ஆன்மா சூக்ஷுமபதார்த்தமென்றும், அது கடவுளிடத்திருந்து வந்ததென்றும், கடவுளால் சிருட்டிக்கப்பட்டதென்றும், அல்லது கடவுளைப்போல அனாதி நித்தியமாயுள்ளதென்றும், வியவகரிக்கும் ஆன்மசித்தாந்திகள், சூக்ஷுமமாகிய ஆன்மா தூலமாகிய தேகசட்டையுள் எவ்வாறு கட்டுப்பட்டிருத்தல் கூடுமென்றும், (நிழலைக் கயிறுகொண்டு கட்டுவதுபோல) சூக்ஷுமத்தை நவவாயிலுடைய தூலம் எவ்வாறு எல்லைக்குட்படுத்திக் கவசஞ்செய்தல் கூடுமென்றும் சொல்கின்றிலர். தூலங் கட்டுக்குட்படுமா? சூக்குமங் கட்டுக்குட்படுமா? தூலம் அறிவுகோசரப்படுமா? சூக்குமம் அறிவுகோசரப்படுமா? அல்லது இவ்விரண்டுமே அறிவிற்கு எட்டுமா? தூலம் அறிவுகோசரப்படுவது நம்மெல்லாருக்குமே அனுபவமாதலான் அதைப் பிரசனை செய்வது ஆவசியகமன்று. சூக்குமம் எந்த அறிவிற்குக்கோசரமானது? அந்த அறிவையுடைய பிறர்க்கு அதை எவ்வாறு விளக்குதல் கூடும்? அது அறிவிற்கு எட்டாதெனின், அறிவிற்கு எட்டாததை எவ்வாறு உண்டென்று அறிந்து தீர்மானித்தல்கூடும்? ஆன்மா தூலமென்னில் சுட்டிக்காட்டுதல் சாத்தியமாமே. தன்னை இன்னதென அறியவும் இலக்ஷியிக்கவுங்கூடாதது, தனக்குத்தாயகமாகிய தலைவனை எங்ஙனம் லக்ஷியிக்கவும் அறியவுங்கூடும்? இவ்வாறு இலக்ஷியிக்கவும் அறியவும் கூடாததை உண்டென்பது, அறிந்துசொல்லுஞ் சொல்லா அறியாமற்சொல்லுஞ் சொல்லா? அறியாததை அறிந்ததாகச்சொல்வது சத்தியமா? அசத்தியமா? மேலும் ஆன்மா சிருட்டிக்கப்பட்டதென்றால், முன்னொருபோது இல்லாதிருந்து பின் உண்டாக்கப்பட்டதாதல்வேண்டும். இங்ஙனம் ஒருபோது இல்லாதிருந்ததை உண்டாக்கவேண்டும் என்று எண்ணின எண்ணமும், எண்ணியபடியே செய்தசெய்கையும் விகாரத்துவமன்றா? விகாரத்துவங் கடவுளிலக்கணமன்றே: ஆயினமையின் கடவுள் சிருட்டித்தாரென்பது நியாயவிருத்தம். மேலும் ஆன்மா சிருட்டிக்கப்பட்டதெனின், அது கடவுளுக்கு அன்னியமோ? அனன்னியமோ? அனன்னியமாயின் கடவுளும் ஆன்மாவும் ஒன்றே; கடவுளும் ஆன்மாவும் ஒன்றாயின், ஆன்மாவிற்கு உண்டெனச்சொல்லும் நினைப்பு மறைப்பாதி அபூரணத்துவம் கடவுளுக்கும் உண்டாயிருத்தல்வேண்டும். கடவுள் அபூரணரென்பது, ஆன்மசித்தாந்திகளாகிய வைதிகிகள் துணிபன்று. ஆயினமையின் ஆன்மா அனன்னியமன்று. அன்னியமெனின், சூனியோபாதானமாய்ச் சிருட்டிக்கப்பட்டதோ? நிர்ச்சூனியோபாதானமாய் சிருட்டிக்கப்பட்டதோ? சூனியோபாதானமாய் சிருட்டிக்கப்பட்டதெனின், இல்லது வாராது உள்ளதுபோகாது இல்பொருள் எக்காலத்தும் இல்பொருளேயாதலான், சூனியத்திலிருந்து ஓர்பொருளும் உண்டாகாது. நிர்ச்சூனியோபாதானமாய்ச் சிருட்டிக்கப்பட்டதெனில், ஆன்ம உற்பத்திக்குமுன் கடவுளோடு அனாதியாய் வேறொருபொருளிருந்திருத்தல்வேண்டும். இரண்டுபொருள் அனாதியாயிருக்க, கடவுளொருவரோ பூரணரென்பது பூர்வபக்ஷமாகும். எங்ஙனமெனின் எங்கும் ஒரே வஸ்துவாய் இருந்தால்மாத்திரம் அதற்குப்பூரணத்துவங் கற்பிக்கலாமேயல்லாது, இரண்டுள்ளபோது ஒன்றிற்குப் பூரணத்துவங்கற்பிப்பது தருக்கவிருத்தம். ஆன்மா நித்தியமெனினும் இதே ஆபாசத்தையடையும்.

மனிதன் தேகான்ம கலப்பாகவிருக்கின்றானென்பது என்னகருத்துகொண்டு? வைதிகிகள் சொல்கின்றது இவ்விரண்டும் வெவ்வேறென்றுதானே? நாமெல்லாம் தூலதேகிகளாகவிருக்கின்றமையால் ஒருவரையொருவர் அறிகின்றோம். இதுபோலவே சூக்குமம் இன்ன தன்மையினதென்றும், இவ்வியல்பினதென்றும், இவ்விவ்விலக்கணங்களோடு இன்னவாறு இருக்கின்றதென்றும் அறிகின்றோமில்லையே. ஏன் காண்கின்றதில்லை? ஜடம் இயக்கப்படுபொருளென்றும், சித்து இயக்கும் பொருளென்றும், ஜடம் அசேதனமென்றும், சித்துசேதனமென்றும் பகுத்துரையாடும் பகுத்துணர்வுடையோர் வகுத்துரையாடுவது ஆவசியகமே: பிரபஞ்சத்தையும் அதனது ஓர்பாகத்தில் நாம் இயங்குவதையுங் கண்டிருந்தும், பிரபஞ்ச இயக்கத்தைக்கண்டுணரும் விசாரதீரமின்மையால், தத்தம் அறியாமையைத் தெரியாமையாக்கக் கடவுளென்றும், ஆன்மாவென்றும் கற்பனைசிருட்டிசெய்து கரந்துரைவது யாதுபற்றியோ! ஜடம் இயக்கப்படுபொருளென்பது யாதுபற்றியோ! இப்பூமி பிரபஞ்சத்திலுள்ள உலகங்களி லொன்றென்றும், உலகங்க ளனேகமென்றும், அவை ஒன்றினொன்று இயங்குகின்றதென்றும் சொல்லும் சாத்திரக்கியானிகளும் ஜடம் இயங்காப்பொருளென்பது யாதுபற்றியோ! நாம்பார்க்கிற சகல வஸ்துக்களுக்கும் பூதாம்சங்களே காரணமாகவிருப்ப, அவையல்லாது வேறொன்றிருக்கின்றதென்பதுயாது கருதியோ: சேதனத்துவம் ஓர்வித தர்ம்மம் என்று சொல்லாமைக்கு யாதுகாரணம்? அது பிரத்தியேகவஸ்துவென்று சொல்லுதற்கு என்ன ஆதாரமுண்டு? வேறே யாதேனும் உண்டா? அது சூக்குமமா? சூக்குமமாவதென்ன? அது அறிவாளிகளுக்குத் தோன்றத்தக்கதா? அறிவை அசட்டைசெய்து துறந்தவர்களுக்குத்தான் தோன்றும்போலும். உலகத்திலுள்ள சகல பொருள்களும் அறிவினால் அறியப்படுவதாக விருப்ப, ஆன்மாமாத்திரம் அறிவாதீதமென்னில், அதனை யறிய அவாவும் ஒவ்வொருவரும் அறிவை யிழந்துவிடல் வேண்டும்போலும்! அறிவற்றவர்களுக்குத்தான் ஆன்மாதோன்றுமோ? நாம் அறிவென்பது சத்த பரிச ரூபரச கந்தமென்னும் ஐந்தறிவைமாத்திரமல்ல; மனிதருக்குண்டென்று சொல்லும் சகல அறிவையுமே. அறிவினது அளவும் எல்லையும் வகுக்கும் திறத்தினேமல்லேம். சிலருக்கு அறிவறிவாகருஷண சக்தியென்று ஓர்சக்தியுண்டென்றும் அதனால் சகலத்தையுங்காணாமலே சொல்கின்றனரென்றும், அறிவு மயக்கமடைந்த பின்னர் சொல்வதை பராதீன கர்த்தத்துவத்தாலென்றும், நம்பி எல்லை இல்லா சுவாதந்திரத்திற்குப் பாரதந்திரத்தைக் கற்பிக்கின்றனர். காரணங் கணிக்கப்படாதனவற்றிற்கு எதைச்சொல்லினும் சொல்லலாம்போலும். இவ்வாறு செய்தல் விசாரசித்தத்தை வேர்கெல்லி விடுதல்போலாமன்றோ: அறிவாகருஷண சக்தியினை சந்தர்ப்பநேர்ந்தபோது இன்னொருகால் விவரிப்போம்.

(இன்னும் வரும்.)

பிரார்த்தனை.

(90-வது பக்கத் தொடர்ச்சி.)

பிரார்த்தனை செய்பவர்களாகிய வைதிகர்கள் தாம் செய்யும் பிரார்த்தனை சிருட்டி சிருட்டிகருக்குச்செய்யும் வந்தனை வழிபாடுகளை ஒத்தது என்று சொலலினுல்தான் கடவுளின்மேல் குறுகியசித்தமுடையாரொன்னும் தோஷாரோபணம் சம்பவிக்கும். குடும்பவளவில் பிதாபுத்திர சம்பந்தத்துவத்தை நோக்கி புத்திரர் தமக்குவேண்டற்பாலனவான பொருள்களையும் தாம் இச்சித்த பொருள்களையும் தத் தம் பிதா மாதாக்களை வெண்டிப்பெறுதல்போன்றது யாம்செய்யும் பிராத்தனை யெனின், சொல்வாம். இந்தத்திருட்டாந்தம் அபூரணசம்பந்த முடைத்தானதேனும் வியவகாரார்த்தம் பூரணசம்பந்தமுடையதாகவே கொண்டு விவகரிப்பாம். மிகுதியாகிய செல்வமும் வெகுவாகியசிறப்பும், உயர்வாகிய நாகரீகமும் உள்ள குடியிர் பிறந்தபிள்ளைகள், நாகரீகமும் சிறப்புமில்லா வறியவர்வீட்டுப்பிள்ளைபோல தத்தம் மாதா பிதாக்களை மிகுதியாகிய பொருள்கள் தங்களுக்குவேண்டுமென்று கேட்பார்களோ? பிள்ளைகளுக்குத்தேவை மிகுதியாயிருப்பதெல்லாம் பிதாமாதாக்கள் தத்தம் பிள்ளைகளுக்கு இன்னது இன்னது ஆவசியகம் என்று உணர்ந்து அளிக்காமையன்ரு? பிதாமாதாக்கள் தத்தம பிள்ளைகளுக்கு இன்னது இன்னது ஆவசியகமென்று உணர்ந்து அளிக்காமைக்குக்காரணம்மிகுதிவிவேகமும்பெருந்தகையும்நாகரீகமும் நன்னிதியும் இல்லாமையன்ரு? இவை அனைத்தும் இருந்தும் அறியாமையையுடைய தம்பிள்ளைகள் சம்மைவருந்திக்கேட்டால் தான் கொடுப்பேம் என்று வைராக்கிய வசத்தராயிருக்குந் தாய்தந்தையர்களைப் புத்திரவஞ்சகரொன்றும் பராபகாரிகளென்றும் வஞ்சநெஞ்சத்தவரொன்றும் சொல்லுவது தவருமோ? தாய்தந்தையர்கள் எவ்வளவுபுத்திமான்களாகவும் புத்திரவாஞ்ஜை யுடையவர்களாகவும் இருக்கின்ருர்களோ அவ்வளவும் அப்புத்திரர்களுடைய வேண்டுகோள் குறைவெய்தியேயிருக்கும். சகல அனுபவமும் மிகுந்த அறிவும் உள்ளதகப்பன் இன்னதுசெய்தால் தன்பிள்ளைக்கு நன்மைவிளையும் என்று உணர்ந்தியற்ருதிருக்க, அனுபவக்குறைவும் அறிவின்சிறுமையுமுடைய பிள்ளை பிதாவுக்கு உணர் வூட்டி வலிந்துகேட்டுப்பெறுவது அப்பிதாவினுடைய அறிவின்மையையும் மௌட்டியத்தையும் நன்குவிளக்குகின்றதன்ரு? மனுஷத்துவமும் அபூரணக்கியானமுமுடைய ஓர்மனுஷனே இங்ஙனம்செய்யுங்கால் இத்தகைய தோஷாரோபணஞ் சம்பவிக்குமேல், தேவத்துவமும்பூரணக்கியானமுமுடைய கடவுள் மேற்சொல்லியவாறு செய்யின் எத்தகைய தோஷாரோபணஞ் சம்பவிக்குமோஅதனைவிவேகிகளேஅனுமானித்துக்கொள்ளக்கடவர். மனிதர் கடவுளை இடைவிடாமல் சதாகாலமும் வழுத்திவாழ்த்திப்பிரார்த்தித்தல்வேண்டும் என்றுவைதிகர்களுள் சிலசார்பார்சொல்லுகின்றனர். நல்லுணர்வும் நாகரீகமும் உள்ள பிதாவை ஒருகால்கேட்டமாத்திரத்தில் கொடுப்பார் என்று நம்பிக்கையில்லாமல் பலகால் பன்னிப்பன்னிக்கேட்கும்புத்திரனை அப்பிதா அருவருப்புற்று கண்டிப்பதுதிண்ணம். அதுபோல் இடைவிடாது பிரார்த்தித்துக் கேட்பதனுல் கடவுளுக்கு அருவருப்புண்டாகுமேயல்லாமல் பிரீதியுண்டாகாதே.

(இன்னும்வரும்.)

இந்துசமயசாரவிளக்கம்.

விநாயகபுராணம், திருமணம்.

(91-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆன்மகோடிகள் பலவுமோங்கி நிலைபெற்றபின்பு, ஒரு காரணமாக விநாயகர் சிவனுக்குப்புத்திரராக அவதரித்திருந்தார். அக்காலத்தில் நாரதன் கைலாய சபாமண்டபத்தின் முகப்பில் இருக்கின்ற விநாயகரிடத்திற் சென்று பலவகையாய்ப் பாடிப் புகழ்ந்து, ஓ சர்வபரிபூரணமூர்த்தியே, பிரமதேவர் முன்னர் தமது தியானச்சிந்தையினின்றும் உகித்த இரண்டு கன்னியரை தேவரீர்க்குத் திருக் கலியாணஞ் செய்ய எண்ணங்கொண்டிருக்கிருர்; சுவாமிகள் வனப்பினுக்கேற்ற அம்மாதர்களுடைய பேரழகை என்னென் றெடுத்துரைப்பேனென்று சொல்லி, பாதாதிகேசம்வரையில் வர்ணித்து, கடைசியில் அம்மங்கையருடைய அழகை ஒருதன்மையாகச் சொன்னேனேயன்றி யுள்ளபடி சொல்லத்தன்னுற் கூடாமையென்றனன் (12).

விளக்கம் (12) அதுபோலவே, அந்த அவலட்சணமான வர்ணனைமுழுதும் இங்கே எடுத்துரைக்க எம்மால் கூடாமை. விருப்பமுடையவர்கள் புராணத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும்.—இப்படிபபட்ட காரியங்களுக்கு துணைபுரிவதற்காகவே பிரமன் நாரதனை சிருட்டிசெய்துகொண்டான். விநாயகர் பிரசன்னமாவதும், விஸ்வரூபமெடுப்பதும், குழந்தையாவதும், புத்திரனகப் பிறப்பதும், மறைந்திருப்பதுந்தான்வேலை. மறைந்திருக்கும்போது எங்கேயிருந்து என்ன செய்துகொண்டிருப்பரோ தெரியவில்லை. முற்று முணர்வினருகிய கடவுளுக்கு அம்மங்கையரின் அழகு இப்படிப்பட்டதென்று தெரிந்திராதா? சிற்றின்ப விசசையில்லாத கடவுளுக்கு நாரதன் மாதர்களின் அழகை யெடுத் துரைத்துக் காமத்தைத் தூண்டிவிட்டான். ரோகை-மச்சம்-நரம்பு-வயிற்றுரோமம் முதலிய எந்த அவயவ இலக்கணத்தையும் நாரதன் விடவில்லை. காணுஸ்தலத்தை "மெல்லிய தொடையைச் சேர்ந்து துணையாக நெருங்கி, மதம் பொழிகின்ற யானையினது பிட்ரியையும் ஆண்மையையும் வென்று, இருபத்து நான்கு அங்குலவளவு வாய்ந்திருக்கின்ற" (இன்னது) எனப் பச்சையாகக்கூறினன்; அம்மாதர்களின் அவயவஇலக்கணங்களை விளங்கக் கூறவேண்டி, அவர்களை நிர்வாணிகளாக்கி யெங்கும் அளவிட்டுப்பார்த்தனனே, அல்லது ஆதியில் மானிடர்களும் மிருகப் பிராயிகளாய் நிர்வாணமாயிருந்தார்களென்றபடி யிருந்ததனுல் பரிஷ்காரமாய் தெரிந்துகொண்டனனே, அல்லது புராணிகன் அங்கலட்சண சாஸ்திரம் தனக்குப் பூர்த்தியாய்த் தெரியுமென்று தனது சாமர்த்தியத்தைக் காட்டினனே? பின்பு நாரதன் கணேசமூர்த்தியினுடைய சம்மதி பெற்றுக்கொண்டு அம்மாதர்களிடத்திற்கு வந்து கலியாணங்கூட்டிவைத்த சங்கதியைச் சொல்லி அப்பால் பிரமனிடத்திற் சென்று தான் நடத்திவந்த காரியங்களனைத்தையும் அறிவிக்க; அப்பிரமன் தாய்தந்தையருடைய சம்மதி பெறவேண்டி கைலாயத்திற்குச் சென்று, பார்வதி பரமசிவனைக்கண்டு காரியத்தை முடித்துக்கொண்டு, கணபதியினிடத்திற்கு வந்து வெகுவாய் தோத்திரஞ்செய்து, சகலத்திலும் "உள்ளும் புறம்பும் வியாபித்து அந்தரியாமியாகிய பரமாத்மாவாகியும், சர்வ சாட்சியாகியு மிருக்கின்ற சுவாமிகள் எவ்வாறு நடாத்திக் காட்டுகின்றதோ அவ்வாறன்றி; இப்பிரபஞ்சங்களில் வேறொன்று நடப்பதில்லாமையால், சுவாமிகள் அப்பெண்களைத் திருமணஞ்செய்து காட்டாதவரையில் இப்பிரபஞ்சங்களில் சுகங்காணமாட்டாது, அஃதன்றியும் ஆண்களோடு பெண்கள் மனங்கலந்து கூடினலல்லது, சுவாமிகள் அடியேற்குக் கற்பித்தருளிய சிருட்டித்தொழில் பிரகாச முருதாதலால், சுவாமிகள் தயவுசெய்து எழுந்தருளி, அடியேனை முற்றினும் ஆட்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தான்." அதற்கு விநாயகர் இசைந்தார்.—இதனுலே முதற்கடவுள் நடத்திக்காட்டாத எந்தக்காரியமும்பிரபஞ்சத்தில் நடக்கமாட்டாதென்று விளங்குகிறது; ஆகையால் கொலை-களவு காமாதி சகல காரியங்களும் முதற் கடவுளினிடத்திலிருந்துதான் பிரபஞ்சத்திற்கு வந்திருக்கவேண்டும். சுட்டிக்காட்டாத வித்தை சொட்டுப்போட்டாலும் வராதென்பதுபோல சகலமும் கடவுள்தான் சுட்டிக்காட்டி யிருக்கவேண்டும். மனிதர்கள்மாத்திரமேயல்லாமல் மற்ற ஜீவராசிகளும் சையோகத்தை கடவுளின் வழியாகத்தான் தெரிந்துகொண் டிருக்கவேண்டும்; அப்படியாயின், கடவுள் விவாகஞ் செய்துகொண்டதை யறிந்து மானிடர்கள் விவாகஞ்செய்துகொள்ளத் தொடங்கியதுபோல மற்ற ஜீவராசிகள் ஏன் செய்துகொள்ளுவதில்லையோ? (அரவகலல்குலார்பால் ஆசைநீக்கவர்க்கே வீடுதருவம்) ஸ்திரீகளிடத்து ஆசை நீங்கினவர்களுக்கே மோட்சம்தருவோமென்று கடவுள் கூறியிருப்பதற்கு மாருக, கடவுளே ஸ்திரீகளின் பேரழகைக்கேட்டு மோகவலையிற் சிக்குண்டு வழிகாட்டிவிட்டு, மனிதர்களைமாத்திரம் தடுப்பது எவ்வளவு நியாயமோ யோசிக்கவேண்டும்.

பின்பு பிரமன் தனது சத்தியலோகத்திற்கு வந்து, விசுவகர்மாவை யழைப்பித்து, கலியாணத்திற்கு வருகின்ற விண்ணூட்டினர்-பூமண்டலவாசிகள்-பாதலத்தினர் முதலானவர்கள் இருப்பதற்குக் தகுந்த விடுதிகள் முதலியவைகளையும் கலியாணமண்டபத்தையும் தீவரமாய் முடிக்கும்படி ஆக்கியாபித்தான். உடனே விஸ்வகர்மா ஒரு நகரமுண்டாக்கி மாடமாளிகை கூடகோபுர முதலியவைகளை யெல்லாம் நிர்மித்துவிட்டான். இதைப்பற்றிப் புராணத்தில் எழுதியிருப்பவைகளை யோசிப்போமாகில், செய்வதுகூடாமையாயினும் வாய்ச்சொல்லுக்கு பஞ்சம் இல்லையென்று தெரிந்துகொள்ளலாம். திருமணப்பத்திரிகையைக்கண்டஉடனே ஈரேழுதினான்கு லோகத்தவர்களும் சந்திரர் சூரியர் முதலிய நவக்கிரகங்களும் சேடனாதிய நாகராஜாக்கள்முதலானவர்களும் தங்கள்தங்கள் மனைமககள் சுற்றத்தினர்முதலிய கூட்டங்களோடு ஏகமாகத்திரண்டு, திருக்கலியாணசம்பிரமத்தைத் தரிசித்து யீடேறும்படி அந்நகரமெங்கணும்வந்து நெருங்கினார்களாம்.—ஒரு சத்தியலோகத்திலே பதினான்குலோகத்தவர்களும் அடங்க இடம்போதாதிருக்குமாயின் அந்தலோகத்தையே பெரிதாக்கியிருக்கவேண்டும் —பூமியைத்தாங்கும் ஆதிசேஷன் முதலானவர்கள் கலியாணத்திற்கு வந்துவிட்டதினாலே, பூமி நிலைத்திருக்க வேறே முட்டு வைத்துவிட்டு வந்தனராகும்.

காமதேனு—கற்பகத்தரு—சங்கநிதி—பதுமநிதிமுதலியவைகள் வேண்டியவற்றை யளித்ததுமல்லாமல், கலியாணமண்டபத்தில் பொன்னாற்செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கின்ற தூண்கள்தோறும் நாட்டியிருக்கும் மரகதவாழைகளும் கமுகமரங்களும் கன்னற்றண்டுகளும் கண்டவர்கள அதிசயிக்கும்படிச் சொர்ணாபரணங்கள் பட்டாடைகள் அமுதுகள் சிற்றுண்டிகள் முதலானவைகளை அளவில்லாமல் கொடுத்துவந்தனவாம். சுவரில் எழுதியிருக்கின்ற சித்திரங்களெல்லாம் சொர்க்க மத்தியபாதாலமுதல் சகலதீபாந்தரங்களிலுள்ள வேறுவேறானபொருள்களை வந்தவர்கட்கெல்லாம் வரையாதுகொடுத்து ஏவல் செய்துகொண்டிருந்தனவாம்.—அத்திருக் கலியாணத்திற்கு இப்பூமண்டலத்திலிருந்து போயிருந்த நம்முன்னோர்களுக்குக் கிடைத்தஆபரணங்களை பின்சந்ததியாருக்குக் காப்பாற்றிவைத்திருப்பார்களாகில், அவற்றைப் பார்க்க நமக்கு எவ்வளவுசந்தோஷமாயிருக்கும். ஒருவேளை அவற்றை கஞ்சிக்கில்லாமல் விற்று காய்ச்சிக்குடித்து விட்டார்களோ, அல்லது இதுகலியுகமாதலால் அவை நிற்காமல் மாயமாய் மறைந்து போயினவோ!—சந்திரர்சூரியர்முதலிய நவக்கிரகங்கள் கலியாணத்திற்கு வந்திருக்க, அந்நகரத்தின்கண் பன்னிரண்டுகோடி சூரியர்களும் சந்திரர்களும் நட்சத்திரக்கூட்டங்களும் ஒருமிக்கக்கூடியிருக்கின்றமையால், அங்கு இராப்பகலென்னும் காலவேற்றுமைகளில்லாது ஒரேதன்மையாயிருந்ததென்று புராணிகர் எழுதியிருக்கிறார். இதைவானசாஸ்திரிகள் கேட்டால் என்னென்று சொல்லுவார்களோ! இது சாத்தியாசாத்தியமென்பதை சாமானியர்களும் அறிந்துகொள்வார்கள். நூறுகோடி ஆயிரங்கோடி அற்புதம் நீர்ப்புதமுதலிய கணக்குகளிருக்கின்றனவே; அந்த உயர்ந்ததொகைகளைக் கொள்ளாமல் உண்மையாகத் தோற்றும்படி செய்யவேண்டி புராணிகர் பன்னிரண்டுகோடி சூரியர்களோடு விட்டுவிட்டனராக்கும். புராணிகர் ஒளியைமாத்திரம் விரும்பினாரேயல்லாமல் வெப்பமுதலியவற்றை யோசியாமற்போயினர்.

அந்நகரத்தில் நிறைந்திருந்த ஆடவர்களில் பற்பலர் யானை குதிரை ஆடு கோழி கவுதாரி காடைகளை சண்டைக்குவிட்டு ஜயம்கூறி சந்தோஷ மடைந்திருந்தார்களாம்.—இப்படிப்பட்ட உபத்திரவமான விளையாட்டுகள் தகாதவையென்று இக்காலத்து புத்திமான்கள்புத்திமதிகூறிக்கொண்டிருக்க, அக்காலத்தவர்கள், (அதுவும் சத்தியலோகத்திலே முதற்கடவுளின் விவாகமகோற்சவகாலத்திலே,) இப்படிப்பட்டவிளையாட்டுகள் புரிய எவ்வளவுபுத்திமான்களாயிருந்திருக்கவேண்டும்! வேதாகமமுதலியவைகளைத் துரிசறவாராய்ந் துணர்ந்து, இருவினைகளினின்று நீங்கியமகாதவத்தையுடைய வசிஷ்டர்முதலான ரிஷிபுங்கவர்களில் சிலர்தருமவாதமும், சிலர் அருத்தவாதமும்,சிலர்காமவாதமும், சிலர் மோட்சவாதமும் செய்துகொண் டிருந்தார்களாம்.—இவர்கள் இப்படிவாதஞ்செய்து கொண்டிருந்தால், துரிசறவாராய்ந்துணர்ந்த உண்மைதானென்னையோ? ஆயின், இக்காலத்து நாம் வாதஞ்செய்வதைப்பற்றிக் கேட்பானேன்!

(இன்னும்வரும்.)

சூத்திரர் முன்னிருந்த நிலைமை.

கல்வி, அறிவு, ஒழுக்க முதலிய நற்குணங்களுடைய நண்பர்களே! யாம்கூறும் சில விஷயங்களுக்கு அபிமான மென்னும் பற்றையகற்றி செவிசாய்ப்பீர்களென நம்புகின்றோம். மானுஷீகம், நடுவுநிலைமைமுதலிய நற்குணமில்லாச் சில பிராமணர் சூத்திரரை முற்காலத்தில் வைத்திருந்த ஸ்திதியை எண்ணுந்தோறும் எமக்கு மனம்கூசுகின்றதே. பிராமணருக்கு சூத்திரர் அடிமைத்தொழில் புரிதல்வேண்டுமென்று, மனுஸ்மிருதி, பராசரஸ்மிருதி முதலிய நூல்களில் எழுதிவைத்து, அவ்வாறே சூத்திரரையடிமைகளாக்கிவந்தனர். இதல்லாமலும், சூத்திரரை முழுமூடர்களாக்கிவைத்தும் வந்தார்கள். அவர்களது சொத்தில் மூன்றுபங்கைப் பொசித்தும் வந்தார்கள். இம்மட்டோ, மனுதர்மநூல், மனுதர்மநூல்யென்று அந்த பாரபக்ஷநூலை, இப்பிராமணர் எடுத்துக்காட்டி சூத்திரரை அநேக இராஜதண்டனைக்கு ஆட்படுத்தியும் வந்தனர். தருமநூல்களின்படியே, சூத்திரர் பிராமணர்களுக்கு அடிமைகளென்பதற்கு பிராமணர்கூறும் நியாயத்தால் நாம் மேலேகூறிய விஷயம் நன்குவிளங்கும். பிராமணர்கூறுவது: “ ‘தெய்வாதீனஞ் ஜகத்சர்வம் மந்திராதீனந்து தைவதம், தன்மந்திரம் பிராமணாதீனம், பிராமணோமமதேவதா’ என்கிற வசன தாற்பரியம் யென்னவென்றால் சகல சகத்துந் தெய்வத்தின் ஆதீனமாயிருக்கிறது, அந்தத்தெய்வம் மந்திராதீனமாயிருக்கிறது, அந்த மந்திரமோ பிராமணாதீனமாயிருக்கிறது, ஆகையால் அப்படிப்பட்ட பிராமணர்தான் சூத்திரருக்குத் தெய்வம், பிராமணரைத்தவிரச் சூத்திரர் வேறே தெய்வத்தை ஆராதிக்கவும் ஒண்ணாது, ஜபதப அனுஸ்டானங்கள் நியமநிஷ்டைகள், செய்யவுங் கூடாது, சூத்திரருக்குக் கோத்திரமில்லை, கர்மத்துக்குப் பாத்திருமல்லர், அவர்களுக்கு மந்திரஞ் சொல்விக்கவொண்ணாது, சொன்னால் பிராமணனுக்குப் பிராயச்சித்தமுண்டு. பூர்வகால இந்து ராஜாங்கமாயிருந்தால் அப்படிப்பட்ட நியமநிஷ்டையுள்ள சூத்திரனை வண்டியில்போட்டுப் பிணைத்துக்கட்டித் தெருவிலிழுத்துப்போய் வாச்சியால் செதுக்கும்படி உத்தரவாய்விடும். இராஜாக்களால் நிறைவேற்றவேண்டிய தருமசாஸ்திரவிதிகளை யெடுத்துக்காட்டுகிறோம், அதாவது—சற்கதி யடையவேண்டுமானால் சூத்திரன் பிராமணருக்கு அடிமைத்தொழில் செய்யவேண்டும், பிராமணன் இலையில் விட்ட சேஷத்தை அவன் புசிக்கவேண்டும். அதைவிட்டு ஒரு சூத்திரன் பிராமணனுக்கு அடிக்கடி இடைஞ்சல் செய்வானாகில் அச்சூத்திரனுக்குப் பிராணதண்டனை விதிக்கவேண்டும், ஒரு சூத்திரன் பிராமணனுடைய மனைவியரோடு சோரக்குற்றஞ் செய்வானாகில் அச்சூத்திரனுடைய மாணியை யறுத்து மழுவாய்க்காய்ந்த ஒரு இருப்புத்தகட்டின்மீது அவன் இறந்து பஸ்மமாகிறவரையில் பிணைத்துவைத்திருக்கவேண்டியது. ஒரு சூத்திரன் பிராமணனுடைய சொத்தைத்திருடுவானாகில் அச்சூத்திரனை நெருப்பில்போட்டு வதைத்துக் கொல்லவேண்டியது.சூத்திரன்பிராமணனுடைய சமுகாளம்முதலியவற்றின் மீது உட்காருவானாகில் அப்படிப்பட்ட சூத்திரனுடைய குதத்தில் காய்ந்த இரும்பின் வாசியையேற்றிச் சூட்டுக்கோலால் சூடி இராச்சியத்தை விட்டுத்துரத்திவிடவேண்டியது, அல்லது பிட்டத்தையறுத்துவிடவேண்டியது. சூத்திரன் பிராமணனை அடித்தால் அவன்கைகளை வெட்டிப்போடவேண்டியது. அவமதிப்பாய்ப்பேசினால், ஒரு இருப்புவாசியை வாயிலேற்றி அவனை நெருப்பில் பொசுக்கவேண்டியது, சூத்திரனை நியாயவிசாரணையதிகாரத்தில் வைத்தால் அந்த ராசாங்கம் அழிந்துபோகும், சூத்திரரைப் பிரம்மா சிருட்டித்தது, பிராமணருக்கு அடிமைத்தொழில் செய்கிறதற்காகவே. சூத்திரன் சம்பாதிக்கிற சொத்தில் இழிவான அன்னவஸ்திரத்துக்கு அவசியம் வேண்டியதைமாத்திரம் வைத்துக்கொண்டு, மற்றதைப் பிராமணருக்குச் சேர்த்துவிடவேண்டியது.” இதுதான் பிராமணர் எழுதிய தருமநூல். இப்பிராமணர்களால் முற்காலத்தில்

சூத்திரருக்கு விளைந்த கொடுமையையும் இக்காலத்து இங்கிலீஷ் ராசாங்கத்தின் நீதியையும்பற்றி காசிவிஸ்வநாதமுதலியார் பின்வருமாறு கூறுகின்றனர்:—"நம்மை யாண்டுவருகிற இங்கிலீசு துரைத்தனம் இதுவரையில் வந்திராமல் இந்துராஜாங்கத்துரைத்தனமே யிருக்குமாகில் மனுநூலிற்சொல்லியிருக்கிறபடி சூத்திரர் பிராமணருக்கு அடிமைகளாக இருக்கவேண்டியதுமல்லாமல் இந்நேரம் முக்காற்பங்கு பஸ்பமாய்ப் பொசுக்கப்பட்டுப் போய்த்தானிருப்பார்கள். கணவனை இழந்த கைம்பெண்கள் கோடிக்கணக்கில் உயிரோடு பதைக்கத் துடிக்கப் பொசுக்கப்பட்டும் வருவார்கள். சூத்திரருக்கு இத்தனை படிப்பேது? செல்வமேது? மேன்மையான அந்தஸ்து உத்தியோகம் ஏது? கதியேது? சூத்திரர் பிராமணர் மூனாகப் பேசுகிறதேது? இன்னும் படியாத மூடச்சனங்கள் பிராமணருக்கு அடிமையாகத்தானிருக்கிறார்கள். அவர்களுடைய சொத்தில் மூன்றுபங்கு புசித்துக்கொண்டுதான் வருகிறார்கள். நம்முடைய மனுநீதிக்கும் இப்போது நம்மையாளுகிற இங்கிலீசு நீதிக்கும் எவ்வளவு வித்தியாசமெனின், நரகத்துக்கும், சுவர்க்கத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசமென்று பட்சபாதமில்லாத உம்முடைய மனதுக்கே தெரியும். தருமநூல்களை வாசியாமலே அவைகளுக்குப் பெருமைபாராட்டும் நண்பர்களே! தருமநூல்களின் கருத்தை யறியுங்கள், அதனது சத்தியா சத்தியத்தைப்பற்றி யோசியுங்கள்! யோசியுங்கள்,"

இ-மு.

வர்த்தமானசங்கிரகம்.

தியாசோபிகல்சொசைட்டி கர்னல் ஆல்காட் அவர்கள் இப்போது லாகோர்-காசி முதலான விடங்களுக்குச் சென்று உபன்னியாசம் செய்துவருகிறார். தமது உபன்னியாசத்திற்கு ஜனங்கள் வந்துசேரும்படி, "மகாத்ம தரிசனம் விர்த்தி ஆகஆக, பரிகாசக்காரர்கள் பின்னும்பின்னும் அடங்கிவருகிறார்கள்" என்பதாகக் கண்டு விடுதி பத்திரிகைகளை வெளியிட்டுவருகின்றனராம். இந்தபிராந்தியங்களில் மகாத்துமாக்களைத் தரிசித்தும் பிறருக்குக் காட்டியும், தாம் கொண்ட கருத்து முடிந்துவிட்டதுபோலும்.

வைசிராய் அவர்கள் சிலமாசங்களுக்குமுன்னமே வெள்ளி ஹவுதா முதலான அலங்காரத்துடனே ஒரு யானையை ஷா அவர்களுக்கு வெகுமதியாக பெர்ஷியாவிற்கு அனுப்பினார்கள். அந்த யானை ஏப்பிரல் மாசம் பதினாருந்தேதி புஷயரில் இறக்கப்பட்டது. நிகழு மாசம் மத்தியில் திஹிரானுக்குப் போய்ச் சேரும். வழியிலே இந்துதேசத்து யானைகளின் விலையைப்பற்றி பற்பலர் பற்பல விந்தையான அபிப்பிராயங்கொள்ளுவார்கள்; ஏனெனில், இந்த யானையானது ரூ 60,000 பெறுமானதென்று ஒரு பத்திரிகை கூறுகின்றது.

பேர்ஷியாவிலிருந்து வருஷவாரியில் ஏற்றுமதிசெய்யப்பட்ட அபினி சுமார் 2500 பெட்டிக்கு விலை ரூ 17,00,000 ஆகிறது. ஸ்பேஹானைச்சுற்றிலும் கசகசாச்செடி பயிர்தான்; சாகுபடிக்காரர்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறதாயிருப்பதினால் அந்தப்பயிர் நிலையாய் விர்த்தியாய்க்கொண்டு, மற்ற பயிர்களுக்குரிய நிலங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறதாம். பெர்ஷியா அபினியானது லண்டன்பட்டணத்திலும் ஹாங்காங்கிலும் நல்ல விலைபோகிறது. புகையிலையும் நல்லவிலையாகிறது, அது இஸ்பஹானிலும் அதைச்சுற்றிலும் முக்கியமாய்ப் பயிர் செய்யப்படுகிறது; சுருட்டுப்பிடிப்பது ஒரு மோஸ்தராக ஏற்பட்டிருப்பதனால், புகையிலை வரவர அதிகசெலவாகிறது. புகையிலையானது மிகுதியாய் பாக்தாதுக்கும் பெய்ரூட்டுக்கும் அலெப்போவுக்கும் போகிறது.

பர்மாவுக்காக அதிகமாய் மூன்று மிலிட்டேரி போலீஸ் பட்டாளங்களை வடமேற்கு மாகாணங்களிலும் அயோத்தியிலும் சேர்ப்பதற்கு அவசியமான ஏற்பாடுகள் செய்யும்படி சர்க்கார் உத்தரவு பிறந்திருக்கிறது. ஆக்ரு-பாரிலி-லக்னோ இம்மூன்று பிரதேசங்களும் அப்படிச் சேர்ப்பதற்கு மத்தியஸ்தானமாகும். எல்லா நேட்டிவ் ஆபீசர்களும்நன்கமீஷனெட் ஆபீசர்களில் பாதிபேரும் பங்காளத்து சேனையிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுமாம்; பஞ்சாப் தேசஸ்தர்கள் ஏற்றுக்கொள்ளப்படார்கள். இந்தப்புது போலீசுசிப்பந்தியை அக்டோபர்மீ வரையில் கவாத்துபழக்கி உருவாக்கி, பின்பு பர்மா சம்பளத்திலே பர்மாவச்கு அனுப்புவார்களாம்.

ஊட்டியில் காபி அரிதாய்விடுகிறது. மணங்கு ஒன்றுக்கு ரூ பதினாறுக்குக் குறைவுபடவில்லை. இரண்டு மாசத்திற்கு முன்னமே ஒருவீசை 15 அணுவுக்கு விற்றது; இருந்தாப்போலிருந்து விலையுயர்ந்து, வாரத்துக்குவாரம் அதிகப்பட்டு வருகிறதென்று ஒரு கடிதநேயர் எழுதினார்.

சென்னை கஞ்சிதொட்டி ஆசுபத்திரியிலிருந்து ஒரு நோயாளி மகமதியன் தப்பித்துக்கொண்டோடி ரங்கோனுக்குப் போய்விட்டான்; அவனை நிகழு மாசமமூன்றாந்தேதிஅவ்விடத்திலிருந்துகொண்டுவந்தார்கள். ஒருஜதை பொன்காப்புதிருடினதாக அவன்பேரில் வேறொரு குற்றமும் பாரிக்கப்பட்டது. மாஜிஸ்திரேட் கோர்ட்டிலே அவ்விரண்டு குற்றத்திற்கும் வெவ்வேறு தண்டனை விதிக்கப்பட்டது.

தூக்கு.—நிர்பாக்கியனான தங்கவேலு முதலி யென்பவன் இரத்தினவேலு என்னும் சிறுவனை கொலைசெய்ததாகக் குற்றவாளியாக்கப்பட்டான். சுமார் எட்டுவயசுள்ள அச்சிறுவனை கைதியினுடைய மைத்துனன் ஸ்வீகாரம் செய்துகொண்டபடியால், மைத்துனனுடைய ஆஸ்தி தனக்குக் கிடைக்குமென்கிற ஆசைக்கு பங்கம்வந்ததுபற்றி, அச்சிறுவனை எப்படியாவது தொலைத்துவிடவேண்டுமென்று கைதி தீர்மானஞ் செய்துகொண்டான். அச்சிறுவன் படித்துக்கொண்டிருந்த பள்ளிக்கூடத்திற்கு சென்ற பிபர்வரிமீ 12உ காலமே கைதிபோய் அச்சிறுவனை அழைத்துக்கொண்டு சென்னைக்கு வடக்கிலிருக்கிற திருவொற்றியூரில் ஓர் சத்திரம்சேர்ந்து இருட்டுகிறவரையில் அங்கேயிருந்து, ஒருவருமில்லாத சமயம்பார்த்து கைதியானவன் அச்சிறுவன்பேரிலிருந்த நகைகளை கழற்றிக்கொண்டு, சத்திரத்துக் கருகாமையிலிருந்த ஒருகிணற்றிலே அச்சிறுவனை தூக்கிப்போட்டுவிட்டான். இவ்விதமாய்த் தன் எண்ணத்தை முடித்துவிட்டு, வீட்டிற்கு திரும்பிவந்து, தான் கூடிவாழ்ந்துகொண்டிருந்த ஸ்திரீயினிடத்திலே இந்த நகைகளைக் கொடுத்து இரகசியமாய் புதைத்துவைக்கச்சொன்னான். தத்தத் தாய் தந்தையர்கள் அன்றையதினமே அச்சிறுவனைக்காணாமல் தேடிக்கொண்டிருந்தார்கள். கைதி தான் ஒன்றும் அறியாதவனைப்போல அத்தாய்தந்தைகளோடுகூட போலீசுக்குப்போய் பிள்ளையைக்காணோமென்று அறிக்கைசெய்ததுமல்லாமல், பிள்ளையைத் தேடிக்கொண்டு போலீசாரோடுகூட பலவிடங்களுக்குப் போனான். கடைசியில் இவன்பேரில் அனுமானமுண்டாகி, இவனைப் பிடித்துக்கொண்டு விசாரித்ததில் இவன் குற்றத்தை ஒப்புக்கொண்டு, அச்சிறுவனிருந்த இடத்தையுங்காட்டி, நகைகளையுங் கொடுத்துவிட்டான். கரோனர் விசாரணையிலே இந்தக் கைதியினுடைய பந்துக்கள் இரண்டுபேர்ஜூரிகளிலிருந்தபடியினாலே, எவனோ கொலைசெய்துவிட்டான் இன்னானெனத் தெரியவில்லையென்று ஜூரித் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின்பேரில் கரோனர் அந்தக் கைதியை ஸெஷனுக்குக் கமிட்டு பண்ணக்கூடவில்லை. ஆகையால் போலீசார் அந்தக் கைதியின்பேரில் செங்கல்பட்டு மாஜிஸ்திரேட்டினிடத்திலே பிராதுகொண்டுவந்தார்கள். குற்றவாளி ஸெஷனுக்குகமிட்டுசெய்யப்பட்டு, தூக்குக்குஉத்தரவுகொடுக்கப்பட்டது. அந்தத்தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட்டுக்குகயிதிசெய்துகொண்டஅப்பீல் வியர்த்தமாயது. கருணைபுரியும்படி கவரன்மெண்டுக்குமனுசெய்துகொண்டான்; கவரன்மெண்டார்தாங்கள் பிரவேசிப்பதற்கு நியாயமில்லையென்றும் சட்டப்படி நடந்தேறவேண்டியதுதானென்றும் உத்தரவுகொடுத்து விட்டார்கள். இந்த உத்தரவைசென்ற ஆதிவாரம் கைதிக்கு அறிவித்து, செவ்வாய்க்கிழமைகாலமே அவன்தூக்கில்விழவேண்டியதென்று தெரிவித்தார்கள். ஐயோபரிதாபம்! அவன் என்னசெய்வான்! அவன் தன்னுடைய புத்தியீனத்திற்காக விசனப்படவேண்டியது தவிர வேறொன்றுமில்லை. அவ்வாறே சென்ற செவ்வாய்க்கிழமை காலமே கூவம் ஆற்றங்கரையிலிருக்கிற பினிடென்ஷியரி மதிலுக்கு வெளியிலிருக்கிற தூக்குமரத்திலே பார்த்தவர்கள் யாவரும் விசனப்படும்படியாக தூக்கிற்போடப்பட்டு, அந்தப் பிரேதம் அவ்விடத்திலேதானே புதைத்துவிடப்பட்டது. சென்னையில் இதற்கு முந்தி தூக்குப்போட்டு இப்போது மூன்று வருஷமாகிறது.

கையொப்பநேயருக்கு.

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறாதவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

பத்திரிகைக்கு எழுதும்கடிதமுதலியவிஷயங்களை
மாத்திரம்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கு
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.